1978 செப்டம்பர் 11]

விடை—(அ) ஜனவரி 1971-ல் துவக்கப்பட்டு 1977-ஆம் ஆண்டு முடிவு பெற்றது.

(ஆ) 105.44 லட்ச ரூபாய்கள்.

(இ) 124.08 இலட்சம் ரூபாய்கள்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்.

(அ) அரைமணி விவாதம் குறித்து.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, பேரவை நிகழ்ச்சி நிரலில் 6-வது பாராவில் ஒரு பொருள் குறித்து ½ மணி நேரம் விவாதம் என்று ஒதுக்கப்பட்டு இருக்கிறது. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த நிகழ்ச்சி வருகிறபோது சொல்லுங்கள். ஏற்கனவே அது அனுமதித்தாகிவிட்டது. அந்த நிகழ்ச்சி எடுத்துக் கொள்ளப்படுகிறபோது அதன் மீது ஒழுங்குப் பிரச்னை அல்லது தங்களுடைய விளக்கம் தெரிவிக்கலாம். இப்போது தேவையில்லை.

(ஆ) ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, அருப்புக் கோட்டை தொகுதியில் காரியாபட்டி என்ற இடத்தில் அனைத்துக் கட்சிகளைச்சேர்ந்தவர்களும் சேர்ந்து 4—9—78-ல் இருந்து பஸ் விடவேண்டும் என்று கோரி போராட்டம் நடத்துவதால் அங்கே போக்குவரத்து பாதிக்கப்பட்டு மாணவர்கள் கல்லூரிக்குப் போகக் கூட முடியாத ஒரு பதட்டநிலை இருப்பதால், நான் 42-வது விதியின்கீழ் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு ஒரு நோட்டீஸ் கொடுத்து இருந்தேன், அது எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறுபடியும் திரு. சுப்பு அவர்கள் இந்தப் பிரச்னையை இங்கே எழுப்ப ஆரம்பித்து விட்டார். (குறுக்கீடு) தயவுசெய்து நான் அவர்களுக்குச்

சொல்லிக்கொள்கிறேன். இந்தப் பிரச்னையைப் பற்றி அறையில் வந்து கேட்டால் எப்போது, என்றைக்கு எடுத்துக் கொள்ளப் படும் என்பதைப் பற்றி விளக்கமாக நான் சொல்ல முடியும்.

[முற்பகல் 10-10]

(இ) சட்டமன்றப் பேரவை அலுவலகத்திலுள்ள இட நெருக்கடி குறித்து.

* திரு. பொ. விஜயராகவன்: தலைவரவர்களே, இங்கே நம்முடைய சட்டமன்றத்தில் ஆர். ஆர். செக்ஷனாக இருந்தாலும் மற்ற செக்ஷன்களாக இருந்தாலும் அங்கே போக, வர மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஏனென்றால் இடநெருக்கடி கடுமையாக இருக்கிறது. மேசைகளையும், நாற்காலிகளையும் நெருக்கமாகப் போட்டுக் கொண்டு, அலுவலர்களும் இடநெருக்கடியில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் 4, 5 பேர் போய்விட்டால் அங்கே நிற்கக்கூட முடியாத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஏற்கெனவே சட்டமன்றத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்ய உறுதிமொழி அளித்தார்கள். இப்போது இட நெருக்கடி மிகவும் அதிகமாக இருப்பதால், உடனடியாக அளிக்கப்பட்ட உறுதிமொழியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை நான் ஒத்துக்கொள்கிறேன், சட்ட மன்றத்திற்கு இருக்கின்ற பல பிரச்னைகள் தீர்க்கப்படாமலிருப் பதை நாங்கள் உணர்கிறோம். திரு. விஜயராகவன் அவர்களு டைய கோரிக்கை மிகவும் நியாயமானது, அந்த நியாயத்தை உணர்ந்து இருக்கிற நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை இந்த குறைபாட்டைத் தீர்த்துவைக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். துறைச் செயலாளர் மூலமாகக் கோரிக்கையை அனுப்பி வைக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: திரு. விஜயராகவன் அவர்களின் கோரிக்கை நிச்சயம் பரிசீலிக்கப்படும் என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் அதை நிறைவேற்றுகின்ற உணர்வைத் தூண்டுகின்ற சபாநாயகர் அவர்கள் என்னை காட்டிக் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் காட்டிக்கொடுக்க வில்லை; இது கோரிக்கை.